# <u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி</u>
# <u>O.S.No. 227/ 2010</u>

2025 வது ஆண்டு ஜீலை மாதம் 10 ம் நாள் வா.சா.3 ன் சாட்சிய வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 வது விதியின் 9 வது (பிரிவின் ஏற்பாட்டின் படி) உதவியாளரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. முருகன் | வட்டம் | பாளையங்கோட்டை |
| க.பெ /த.பெ | திரு.முத்தையா | கிராமம் | மேலப்பாளையம் |
| வயது | 54 | மதம் | |

<u>10.07.2025 முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கில் 3–ம் தரப்பினர் ஆவேன். எனது முதல் விசாரணைக்கான சாட்சியத்தை நிரூபண வாக்கு மூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தயார் செய்யப்பட்டவை தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

**<u>2 முதல் 6, 9 முதல் 22, 24 முதல் 30, 32, 33 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) நான் நீதிமன்றத்திற்கு நீதிமன்றத்தில் இருந்து அனுப்பப்பட்ட அசல் சம்மனை நீதிமன்றத்திற்கு தற்போது கொண்டு வரவில்லை என்றால் சரிதான். அதன் அசலை வாதியின் வழக்கறிஞருக்கு வாட்சப் மூலமாக அனுப்பினேன் என்றால் சரிதான். எனக்கு சம்மன் எப்போது கிடைத்தது என்றால் 06.07.2025 ம் தேதி கிடைத்தது. எப்போது வாதியின் வழக்கறிஞருக்கு சம்மனை அனுப்பினேன் என்றால் தற்போது நீதிமன்றம் வந்தவுடன் அனுப்பினேன். வாதியின் வழக்கறிஞருக்கு எதற்காக சம்மனை அனுப்பினேன் என்றால் அவர் கேட்டதால் அனுப்பினேன்.

2) நான் வாதி வழக்கறிஞரிடம் எதற்காக தங்களுக்கு அனுப்ப வேண்டும் என கேட்டேனா என்றால் இல்லை. என்னிடம் கேட்ட வழக்கறிஞர் தான் வாதிக்கு ஆஜராகிறார் என்று எனக்கு எப்படி தெரியும் என்றால் முத்துபாண்டி என்பவரின் மனைவி சந்தனத்தம்மாள் என்பவர் தான் இன்று என்னை

அழைத்து வந்து அறிமுகப்படுத்தினார். யார் வாதி மற்றும் பிரதிவாதியாக இந்த வழக்கில் உள்ளார்கள் என்று முத்துபாண்டி மனைவி சந்தனமாரி என்பவர் சொல்லி தான் தெரியும் என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சந்தனமாரி செல்லி தான் தெரியும் என்றால் ஏற்கனவே இடம் சம்பந்தமாக வழக்கு நடக்கிறது என்று எனக்கு தெரியும்.

3) என்ன சர்வே நம்பர், எத்தனை ஏக்கர் உள்ள இடத்திற்கு வழக்கு நடக்கிறது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. செல்வ விநாயகர் கோவில் தெருவில் வீரபுத்திர தேவர் என்பவர் வசித்து வந்தாரா என்றால் எனக்கு ஆளை தெரியாது ஆனால் வசித்து வந்ததாக தெரியும். அவர் கவுன்சிலராக இருந்தார் என்றால் கேள்விபட்டுள்ளேன். சங்கர சுப்பு தேவர் என்பவர் தனக்கு ஒரே பையன் சண்முகவேல் தேவர் என 1951ம் ஆண்டு ஒரு ஆவணம் பிறப்பித்து கொடுத்துள்ள நிலையில் நான் சங்கரசுப்பு தேவருக்கு தங்கவேல் தேவர் என்பவர் தான் ஒரே மகன் என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

4) வாதி தரப்பில் கேட்டுகொண்டதற்கு இணங்க அவர்களுக்கு ஆதரவாக அவர்கள் சொன்ன சங்கதிகளை நீதிமன்றத்தில் சாட்சியமாக சொல்கிறேன் என்றால் எனக்கு தெரிந்ததை தான் சொல்கிறேன். நான் நிருபண வாக்குமூலத்தில் சொன்ன சங்கதிகளை வாதி வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டு அதற்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல நான் சொன்னதை வைத்து தான் தயார் செய்யப்பட்டது. நான் எந்த தட்டச்சர் அலுவலகத்திலும் உட்கார்ந்து நிருபண வாக்குமூலத்தை தயார் செய்யவில்லை என்றால் சரிதான்.

(சாட்சி முருகன் என்பவர் அவருக்கு சார்வு செய்யப்பட்ட அசல் சம்மனை அவரது வீட்டில் இருந்து எடுத்து வந்து இந்நீதிமன்றத்தில் இன்றைய தினமே ஆஜர் செய்தார். சாட்சி முருகன் அவரது ஆதார் அட்டையின் அசலை

இந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளிப்பதற்கு முன்பு நீதிமன்ற சம்மனின் நகலுடன் ஆஜர் செய்தார், சாட்சி தான் முருகன் என்பதை நீதிமன்றம் அவரது ஆதார் அடையாள அட்டை மற்றும் அசல் சம்மனை பார்த்து உறுதி செய்து கொண்டது)

MARIMUTHU R MUNIYASAMY

Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2025.07.10 17:58:43 +0530

Principal District Munsif,

Tirunelveli.